காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 09 செவ்வாய்க்கிழமை 25.07.2023 கதிர் 256

# முதலில் ஜனாதிபதித் தேர்தல் அடுத்து நாடாளுமன்றத்திற்கு

## அதுவே ஜனாதிபதியின் அடுத்த வருட திட்டம் விக்னேஸ்வரனிடம் அவரே நேரில் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

அடுத்த வருடம் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கே ஜனாதிபதி ரணில் திட்டமிட்டுள்ளார். அதைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தேர்தலைநடத்துவதற்கும் மூன்றாவதாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும் அவர் திட்டமிட்டுள்ளார்.

இந்த விடயங்களை நேற்று தன்னைச் சந்தித்த வடக்கு மாகாண முன்னாள் முதல்வரும் தமிழ் மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரனிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேரில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் நேற்று மாலை 6 மணிமுதல் முக்கால் மணி நேரம் நடந்த இந்தச் சந்திப்பில் பல தரப்பட்ட விடயங்களும் பேசப்பட்ட நிலையில், தனது தேர்தல் திட்டம் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விக்னேஸ்வரனிடம் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குத் தான் திட்டமிடுகின்றார் என்பதையும் அவர் தெரிவித்துள்ளார். ☞2

## இது ரகசியம் அல்ல!

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு அங்கு அரசியல் ரீதியாக எதிர்ப்பு வலுத்து வருகின்றது. ஏற்கனவே அரசியல் கட்சிகள் பலவும் செந்தில் தமது கட்சி அரசியலை கிழக்கில் வளர்ப்பதில் அதீத ஆர்வம் காட்டி வருகின்றார் என்று ஜனாதிபதிக்கு முறையிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் தற்போது மருத்துவர்களும் அவருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளார்கள்.

கூட்டம் ஒன்றில் கருத்துத் தெரிவித்த செந்தில் தொணடமான், மருத்துவர்களைத் தகாத வார்த்தைகளில் பேசினார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் கிழக்கு மாகாண மருத்துவர்கள் கடும் வேதனையடைந்திருக்கிறார்கள்.

அவர்கள்தமதுஅதிருப்தியைவெளிப்படுத்தி ஆளுநருக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கச் செயலாளர் ஹரித்த அலுத்கே தெரிவித்தார். இந்த விவகாரம் அங்கு பூதாகரமாகக் கிளம்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே அரசியல் கட்சிகளும் ஆளுநர் மீதுகடுப்பில்இருக்கும்நிலையில், விரைவில் இந்த விவகாரம் ஊதிப் பெருப்பிக்கப்படும் என்று தெரிகின்றது.

............ ☞2

## வெள்ளியன்று முழு அடைப்பு

### கொக்குத்தொடுவவாய் புதைகுழி அகழ்வு மீது சர்வதேச கண்காணிப்பை வலியுறுத்தி

(ந.லோகதயாளன், நிதர்சன்.)

கொக்குத்தொடுவாய் மனிதபுதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும் சர்வதேச கண்காணிப்பை வலியுறுத்தியும் ஜூலை 28 கவனயீர்ப்பு போராட்டத்துக்கும் மாகாணம் தழுவிய முழு அடைப்புக்கும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்க ளின் உறவுகளின் தலைவர்கள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளனர்.

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட சங்கத்தினர் நேற்று முல்லைத்தீவில் செய்தியாளர்களைச் சந்தித்து இதனைத் தெரிவித் ☞2

## 13 மைனஸ், பிளஸ் என்று அரசியல் தீர்வு நாறுகிறது

### மனோ கணேசன் சாடல்




அரசியல் தீர்வு 13 மைனஸ், பிளஸ் என்று நாறுகின்றது மறுபுறத்தில் பொறுப்புக்கூறல்நாறுகின்றது என்று தெரிவித்தார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.

இனி இல்லை கறுப்பு ஜூலைஎன்றதொணிப்பொருளில் கொழும்பில் நடந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டுசிங்களத்தில்உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார் என்று அவரது கட்சி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில்மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1958, 1977, 1983 என வரிசையாக எங்களை உயிருடனும், எம்வீடுகளையும், வர்த்தக நிலையங்களையும்எரித்தார்கள். ☞2

## மாகாண சபைகளை வலுப்படுத்த விக்னேஸ்வரனுடன் ரணில் பேச்சு

### நேற்று மாலை முக்கால் மணி நேரம் சந்திப்பு

(ந.லோகதயாளன்)

மாகாண சபைச் சட்டங்களை வலுப்படுத்துவது தொடர்பில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினருமானநீதியரசர்க.வி.விக்னேஸ்வரனை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதி செயலகத்தில் இந்தச் சந்திப்பு மாலை 6 மணி முதல் 45 நிமிடங்கள் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் செயலாளர் கலாநிதி விக்னேஸ்வரனும் உடனிருந்தார்.

சந்திப்புக் குறித்து நீதியரசர் விக்னேஸ்வரன் காலைக்கதிர் பத்திரிகைக்குத் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் செயலாளர்ஊடாகஇந்தப்பேச்சுக்கான அழைப்புக் கிடைத்தது. கலாநிதி விக்னேஸ்வரனையும் அழைத்துவரமுடியுமாஎன்று கேட்டுஅவரையும்அழைத்துச் சென்றேன்.

அரசமைப்பின்13ஆவது திருத்தத்தை எப்படியாவது நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தான் வேலைசெய்துகொண்டுள்ளார். அது சம்பந்தமாக எல்லாநடவடிக்கைகளையும் எடுக்கவேண்டியதாக இருக்கின்றது, நீங்கள் (விக்னேஸ்வரன்) தந்த ஆவணத்தின்படி மாகாண சபையை எப்படி வலுப்படுத்தலாம் என்பது தொடர்பாகப் பேசத்தான் அழைத்தனான்.

மாகாண சபைகளை வலுப்படுத்துவது தொடர்பாக நீங்கள் ஏற்கனவே தந்த ஆலோசனைச் சபைக்கு நீங்கள் (விக்கி) பரிந்துரைத்துள்ள5பேருக்குமேலதிகமாக மூன்று பேரைத் ☞2

## ஜனாதிபதியின் கூட்டத்தை ஜேவிபி புறக்கணிக்கும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைத்துள்ள அனைத்துக்கட்சிக்கூட்டத்தை ஜேவிபிபுறக்கணிக்கவுள்ளது.

இந்தியாவில் இருந்து திரும்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதமிழ்அரசியல் கட்சிகள் உள்ளடங்கலாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் நாளை புதன்கிழமை பேச்சு நடத்த அழைப்பு விடுத்துள்ளார்.

அரசமைப்பின்13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அவர் இந்தச் சந்திப்பை நடத்தவுள்ளார். எனினும் இந்தச் சந்திப்பில் ஜேவிபி கலந்துகொள்ளாது என்று கட்சியின் ஊடகப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தற்போதைய ஆட்சியாளர்கள் மக்களை ஏமாற்றுவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கை எனவும் இதில் கலந்து கொள்ளப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

13ஆவது அரசியலமைப்புத்திருத்தத்தை அமுல்படுத்த ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைக்கும் தாம் ஆதரவளிக்கப் போவதில்லை என்றும் எதிர்வரும் தேர்தலில் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெறுவதற்கே ஜனாதிபதி ☞2

## பணிப் பெண் சிறுமியின் உயிரிழப்பு முழு அறிக்கை கேட்கிறார் ஆளுநர்

(நிதர்சன்)

யாழ்ப்பாணத்தில் 17 வயதுச் சிறுமி ஒருத்தி பணிப் பெண்ணாக வேலைக்கு அமர்த்தப்பட்டமை தொடர்பிலும் அவரது சாவு தொடர்பிலும் விசாரணை நடத்தி விரைவில் தனக்கு முழுமையான அறிக்கை வழங்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

சிறுமி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பாக உடனடியான நடவடிக்கைகளை எடுககுமாறும் உரிய அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுப் பகுதியில் பணிப் பெண்ணாக வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த 17 வயதுச் சிறுமி கேதீஸ்வரன் தர்மிகா (வயது 17) ஞாயிற்றுக்கிழமை சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பாக தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்ட வடமாகாண ஆளுநர் பி.எஸ். எம்.சாள்ஸ் இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் உத்தரவிட்டார்.

சிரேஸ்ட பொலிஸ்மா அதிபரிடமும் யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடமும் இது தொடர்பாக விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார். ஆளுநர் செயலக அலுவலர்கள் இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு பூரண அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்குமாறும் கூறியுள்ளார்.

பாடசாலை செல்லும் வயதுடைய சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் செயற்பாடுகள் இன்னும் நடைபெற்றுக்கொண்டிருப்பது தமக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்துவதாககூறிய ஆளுநர் இது தொடர்பாக கண்டனத்தையும் வெளியிட்டார்.

சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் ☞2

## ரணிலே ஜனாதிபதி வேட்பாளர் புதிய கூட்டணி அமைக்க முயற்சி

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ரணில் விக்கிரமசிங்கவே போட்டியிடுவார் என்று கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

வத்தளை பிரதேசத்தின் ஐக்கியதேசியக்கட்சியின் புதிய அமைப்பாளராக அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ள நிலையில் இடம்பெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பெரும் கூட்டணியில் போட்டியிடுவார்.

இந்தகூட்டணிசிறிலங்கா சுதந்திர கட்சி, பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி போன்ற கட்சிகளில் இருந்தவர்களால் உருவாக்கப்படும்.

ஜனாதிபதி இந்த கட்சிகளை ஒன்றிணைக்க முயற்சி செய்கிறார் - என்றார்.

### அடுத்த ஜனாதிபதித் தேர்தலில்

## ரணில் போட்டியிட்டால் சஜித் ஒதுங்கிவிடுவார்

### அமைச்சர் ஹரின் அடித்துக்கூறுகிறார்

அடுத்த வருடம் இடம் பெறும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிட்டால் சஜித் பிரேமதாச போட்டியிடப் போவதில்லை என்பதை பந்தயம் வைத்துத் தெரிவிக்கிறேன். அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ஆட்களைப் பிரித்தெடுக்கும் பணியில் நான் இன்னும் இறங்கவில்லை என அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி வத்தளை தொகுதி அரசியல் சபை கூட்டம் வத்தளை பிரதேசத்தில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களை கட்சியில் இருந்து நீக்கியதாக எனது சஜித் பிரேமதாச கடிதம் அனுப்பி இருந்தார். எம்மை விலக்கியதாக தெரிவித்த பின்னர் நாங்கள் எங்கு செல்லப்போகிறோம்? அதனால் அது தொடர்பில் நாங்கள் அலட்டிக் கொள்ளப் போவதில்லை.

அத்துடன் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியி ☞2

# கறுப்பு ஜூலை நினைவாக கனேடிய பிரதமர் அறிக்கை

## மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதை நிறுத்தமாட்டோம் எனவும் அறிவிப்பு

கருப்பு ஜூலை மற்றும் அதைத்தொடர்ந்தவன்முறைகளால் பாதிக்கப்பட்ட மற்றும் தமது அன்புக்குரியவர்களை இழந்த அனைவருக்கும் கனடாஆட்சியாளர்கள்சார்பாக எனதுஆழ்ந்தஅனுதாபங்கள். மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதை நிறுத்த மாட்டோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ. இலங்கை வரலாற்றில் இருண்ட நாட்களாகப் பதியப்பட்ட கறுப்பு ஜூலை படுகொலைகள் நிகழ்ந்து 40 வருடங்கள் நிறைவடைந்ததை முன்னிட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார் கனேடியப் பிரதமர். அந்த அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு, ஜூலை 1983 இல், இலங்கை முழுவதும் பயங்கரமான தமிழர் விரோதப் படுகொலைகள் நடத்தப்பட்டன. அவர்கள் ஆயிரக்கணக்கான உயிர்களைக் கொன்றனர், மேலும் பலரைக் காயப்படுத்தினர், இடம்பெயர் வைத்தனர் மற்றும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினர். கறுப்பு ஜூலையின் கொடூரமானது பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிரிழப்புக்கு வழிவகுத்த பல தசாப்த கால ஆயுத மோதலாக மாறியது. பதற்றங்களை அதிகரித்தது, அதன் மனவடுவால் ஏற்பட்ட பாதுப்பு சமூகத்தில் இன்றும் தொடர்கின்றது. .

இந்தச் சோகமான நாளில், பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரவும், உயிர் பிழைத்தவர்களைக் கௌரவிக்கவும், வெறுப்பு மற்றும்வன்முறைக்கு ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை தனியாகச் சந்தித்துப் பேசி இருந்தார். இதற்கான அழைப்பை இந்தியா செல்வதற்கு முன் பேரணில் விடுத்து விட்டார்.

வடக்கு கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கடைசியாக நடத்திய சந்திப்பில் சம்பந்தனிடம் சரமாரியாக வாங்கிக் கட்டிய ரணில், அதன் பின்னர் நாடாளுமன்றத்தில் விக்னேஸ்வரனைச் சந்தித்தபோது திங்கட்கிழமை அவரைச் சந்திப்பார் என்று தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்ற அமர்வுகள் முடிந்ததும் யாழ்ப்பாணம் செல்வதற்குத் தயாராக இருந்த விக்னேஸ்வனிடம், இந்தியாவால் திரும்பி வந்ததும் திங்கட்கிழமை உங்களைச் சந்தித்துப் பேசவேண்டும் அதனால் கொழும்பிலேயே இருங்கள் என்று விக்னேஸ்வரனிடம் தெரிவித்திருக்கிறார் ரணில்.

2015 முதல் இரா.சம்பந்தரின் முதுகில் சவாரி செய்து வந்த ரணில் விக்கிரமசிங்க, தற்போது விக்னேஸ்வரன் முதுகில் ஏறி அமர்ந்திருக்கிறார் என்பது புலனாகின்றது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## முதலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம், உள்ளூராட்சிசபைத்தேர்தல்களை உடன் நடத்தும் எண்ணம் ஜனாதிபதிக்கு இருப்பதாகத் தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை அவசரமாக நடத்த வேண்டியதில்லை என்று ஜனாதிபதி கருதுகின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக ஜனாதிபதி இந்தியா பயணமாவதற்கு முன்னர் தேர்தல்கள் ஆணைக் குழுவின் உறுப்பினர்களைச் சந்தித்து, ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடத்துவது குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் இந்தத் தேர்தல்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவினருக்கு உறுதியளித்துள்ளார்.

இதனடிப்படையில் குறுகிய காலத்திற்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படி ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆணைக்குழுவினரிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுவார் என்பதே எமது நிலைப்பாடு. அதனை அவர் பகிரங்கமாக தெரிவித்த பின்னர் புத்தியுள்ள மனிதர்கள் எடுக்கும் தீர்மானத்தைக் கண்டுகொள்ளலாம்.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் சஜித் பிரேமதாச அந்த தேர்தலில் போட்டியிடமாட்டார் என்பதை நானும் மனுஷநாயக்காரவும் பந்தயம் வைத்து தெரிவிக்கிறோம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இல்லாமல் செய்ய வேண்டும். அதற்காக டலஸ் அழகப்பெருமவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதாக தெரிவித்து, தேர்தலில் இருந்து திருட்டுத்தனமாக ஒதுங்கிக்கொள்வார்.

அடுத்த ஜனாதிபதியாக வருவதற்கு ரணில் விக்ரமசிங்கவைத் தவிர வேறுயாரும் இல்லை. ஏனெனில் நாடு வீழ்ச்சியடைந்து வங்குரோத்து அடைந்திருந்த நிலையில், நாட்டை பொறுப்பேற்று, கட்டியெழுப்ப யாரும் முன்வராத நிலையில் ரணில் விக்ரமசிங்க முன்வந்தார்.

அன்று ரணில் விக்ரமசிங்க முன்வராவிட்டால் எமது நிலை என்னவாகி இருக்கும் என்பதை நினைத்துப்பார்க்க வேண்டும்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து யாரையும் பிரித்து எடுக்க இன்னும் நான் முயற்சிக்கவில்லை. அந்த பணியில் இன்னும் இறங்கவில்லை. அதில் இருக்கும் அனைவரையும் என்னால் பிரித்தெடுக்க முடியும்.

நாடு வங்குரோத்து நிலையில் மூழ்கிக்கொண்டிருக் கையிலேயே நானும் மனுஷ நாணயக்காரவும் இந்த கப்பலில் ஏறினோம்.

எமது அரசியல் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்காமல், நாடு தொடர்பாக மாத்திரமே சிந்தித்து நாங்கள் இந்த தீர்மானத்தை எடுத்தோம்.

மேலும் அடுத்த வருடம் முதல்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என நாங்கள் நம்புகிறோம். அந்த தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிடுவார். அவர் உயர்ந்த நிலையில் வெற்றிபெறுவது உறுதியாகும். அதனால் வெற்றிபெறும் அணியுடன் ஆரம்பத்திலேயே இணைந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

## பணிப்பெண்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகளை தடுக்கும் வேலைத்திட்டங்களையும் வேகமாக முன்னெடுக்குமாறு ஆளுநர் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், இந்த சம்பவம் குற்றச்செயலாக அமைந்திருப்பின் அது தொடர்பில் குற்றமிழைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதை ஆளுநர் செயலகம் தொடர்ந்து கண்காணித்து உறுதிப்படுத்துவதோடு, இவ்வாறான சம்பவங்கள் இனியும் தொடராதிருக்கத் தேவையான காத்திரமான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் எடுப்பதையும் ஆளுநர் செயலகம் உன்னிப்பாக அவதானிக்க வேண்டும் என்றும் உத்தர விட்டுள்ளார். பெற்றோர் இது தொடர்பில் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் நியமிப்பார் என்றும் அந்தக் குழுவினரைக் கொண்டு ஒட்டுமொத்த மாகாண சபைகளுக்கும் ஏற்ற விதத்தில் சட்டங்களைத் தயார்ப்படுத்தவும் குறைபாடுகளை நிவர்த்திசெய்யவும் அதனை வலுப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் அவர் எம்முடன் பேசினார்.

நாளை புதன்கிழமை இது தொடர்பில் நடக்கவுள்ள நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் 13 தொடர்பில் மீண்டும் ஆராயப்படவுள்ளதாகவும், அந்தக் கூட்டத்தில் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கருத்துக்களையும் அறிய இருக்கின்றேன் என்றும் கூறினார்.

எங்களால் முடியுமான வரையில் நாம் முன்னேறிச் செல்லவேண்டி இருக்கின்றது. அதற்கு எனது ஒத்துழைப்பு வேண்டும் என்றுதான் என்னிடம் அவர் கோரிக்கை விடுத்தார் - என்றார்.

## வெள்ளியன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனர். வலிந்து காணாமலாக்கப் பட்டவர்களின் உறவுகளின் முல்லைத்தீவு மாவட்ட தலைவி மரிய சுரேஷ் ஈஸ்வரி, செயலாளர் பிரபாகரன் றஞ்சனா, வவுனியா மாவட்ட தலைவி சிவானந்தன் ஜெனிதா மன்னார் மாவட்ட தலைவி மனுவல் உதயச்சந்திரா, யாழ்ப்பாணம் மாவட்ட தலைவி சிவபாதம் இளங்கோதை ஆகியோர் இணைந்து இந்த அழைப்பை விடுத்தனர்.

வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு நீதிமன்றுக்கு அருகில் மக்கள் இறுதிப் போரில்ல் உறவுகளை இராணுவத்திடம் கையளித்த பகுதியில் ஆரம்பிக்கும் கவனயீப்பு பேரணியானது முல்லைத்தீவு நீதிமன்றுக்கு முன்பாக சென்று மாங்குளம் முல்லைத்தீவு வீதியூடாக மாவட்ட செயலகத்தை வந்தடையும் என்றும் அங்கு மாபெரும் கண்டண ஆர்ப்பாட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

வடக்கு கிழக்கு பகுதிகளை சேர்ந்த வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் அனைவரும் இணைந்து மாபெரும் போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளனர் அன்றைய போராட்டத்தில் அனைத்து தரப்பினரும் அரசியல் கட்சிகளும் எவ்வித பேதமுமின்றி ஆதரவளிக்க வேண்டும் என்பதுடன் மத தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிவில் சமூக செயற்பாட்டா ளர்கள் உள்ளிட்ட அனைவரையும் பங்குகொள்ளுமாறும் அவர்கள் அழைப்பு விடுத்தனர். அன்றையதினம் வடக்கு கிழக்கில் முழு அடைப்பு மேற்கொள்ளுமாறும் வர்த்தகர்கள், வர்த்தக நிலையங்களை மூடியும், போக்குவரத்துக்களை நிறுத்தியும், பாடசாலைகள், அரச அலுவலங்களை மூடியும் ஆதரவளிப்பதுடன் முல்லைத்தீவில் நடைபெறவுள்ள போராட்டத்திலும் அனைவரும் பங்கேற்கவேண்டும் எனவும் அழைப்பு விடுக்கப்பட்டது.

## 13 மைனஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலகமே திட்டி தீர்க்கும் இட்லரே, 2ம் உலகயுத்தத்தின் போது லண்டன் நூலகத்தின் மீது குண்டு வீச வேண்டாம் என்று ஆணையிட்டாராம். ஆனால், இங்கே இனவாத அரசியலர் 1981ல் ஒரு இலட்சம் நூல்களை கொண்ட யாழ் நூலகத்தையே எரித்து தமிழரின் அறிவு பெட்டகத்தையே எரித்தார்கள். இதையும் தாண்டிதான் இன்னமும் தமிழர்கள் இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தற்போது ஜனாதிபதி விக்கிரமசிங்க, மத்திய வங்கி குண்டு வழக்கின் கைதிகளை பொது மன்னிப்பில் விடுவித்துள்ளார். அதுபற்றி அறிவிக்கும் சிங்கள ஊடகங்கள் மத்திய வங்கி குண்டு வெடிப்பின் போது ஏற்பட்ட அழிவுகளை காணொளியாக தொலைகாட்சி செய்திகளில் நினைவுறுத்தி காட்ட கண்டேன்.

இது உலகை உலுக்கிய கறுப்பு ஜூலை கலவரம் நடந்த நாட்கள். இதுபற்றியும் நினைவுறுத்தி, கறுப்பு ஜூலை கலவர எரிப்பு, அழிவு காட்சிகளை தேசிய ஊடகங்கள் காட்டவில்லை. ஏனெனில் கொழும்பு ஹவ்லக் நகரில் எங்கள் வீடு கொள்ளையடிக்கப்பட்டு எரியூட்டப்பட்டது. எங்கள் பலவாகனங்கள் எரியூட்டப்பட்டன. புறக்கோட்டையில் எங்கள் வர்த்தக நிலையம் உடைத்து கொள்ளையடிக்கபட்டது. எல்லாம் எங்கள் தந்தை உழைத்து சம்பாதித்த சொத்துகள். எவரையம் ஏமாற்றி கொள்ளை அடிக்கப்பட்டவை அல்ல.

அவற்றையும் செய்திகளில் காட்ட வேண்டும் என நான் விரும்பவில்லை. எனக்கு பார்க்க விருப்பம் இல்லை. நினைக்கவும் விருப்பம் இல்லை. நான் வன்முறையை வெறுக்கிறேன். ஆனால் ஏன் இரட்டை கொள்கைகள் என கேட்கிறேன். ஒருநாடு ஒருகொள்கை என்கிறீர்கள். அப்புறம் ஏன் செய்தி அறிவிப்பில் கூட இரட்டை கொள்கை?

1958, 1977, 1981 யாழ் நூலக எரிப்பு, 1983... இவை எது தொடர்பில் குற்றவாளிகள் அடையாளம் காணப்படவில்லை. தண்டனை வழங்கப்படவும் இல்லை. இவை அனைத்துக்கும் காரணம் இவர்கள் சிங்களவர்கள். நாம் தமிழர். இது சிங்கள நாடு. பௌத்த நாடு. நாம் தமிழர்கள். இந்த சிந்தனை மாறனும். முதலில் குற்றம், தவறுகள் ஏற்கப்பட வேண்டும். அது தான் பொறுப்பு கூறல். ஆனால், எதுவும் இல்லை.

இப்படி பொறுப்பு கூறல் நாற, மறுபுறம் அரசியல் தீர்வு நாறுகிறது. 13 மைனஸ், ப்ளஸ் என்று நாறுகிறது. வழமையாக அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு ஏதோ தீர்வை தரும் போது எப்போதும் எதிர்க்கும் வழமையான எதிர்க்கட்சி அரசியல் இனி இல்லை என்ற உத்தரவாதம் மட்டுமே என்னால் தர முடிகிறது. 1983 முடிந்து இந்த 40 வருடங்களில் இவ்வளவு தூரம்தான் நாம் வந்துள்ளோம் - என்றுள்ளது.

## ஜனாதிபதியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாராகி வருகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறுபான்மையினரின் பிரச்சினைகளுக்கு கடந்த பெப்ரவரி மாதத்திற்குள் தீர்வுகளை வழங்குவதாக விக்கிரமசிங்க உறுதியளித்த போதிலும், ஜனாதிபதியும் அரசாங்கமும் இதுவரை அதனை நிறைவேற்றத் தவறியுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

## கறுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக எப்பொழுதும் எழுந்து நிற்கவும் தமிழ் கனேடியர்கள் மற்றும் உலகெங்கும் உள்ள தமிழ் சமூகங்களுடன் இணைந்து கொள்கிறோம்.

கடந்த ஆண்டு, கனடா நாடாளுமன்றம் மே 18 ஐ தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக மாற்றுவதற்கான பிரேரணையை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது, இது இந்த ஆண்டு முதல் முறையாக குறிக்கப்பட்டது. இன்றும், இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் துஸ்பிரயோகங்களுக்கு பொறுப்புக்கூறல் வேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறோம்.

மனிதஉரிமைகளுக்காக குரல் கொடுப்பதை கனடா ஒருபோதும் நிறுத்தாது, இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மிகவும் பாதிக்கப் படக்கூடிய சமூகங்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு நாங்கள் தொடர்ந்து உதவுவோம்.

கறுப்பு ஜூலைக்குப் பிறகு, பலர் தங்கள் நாட்டிலிருந்து வெளியேறக்கட்டாயப் படுத்தப்பட்டபோது, கனடா அரசு அவர்களைக் நாட்டுக்கு அழைப்பதற்காக 1983 இல் ஒரு சிறப்பு நடவடிக்கை திட்டத்தை நிறுவியது, 1,800 தமிழ் மக்கள் கனடாவுக்கு வந்து புதிய வாழ்க்கையை உருவாக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் - இது உலகின் மிகப்பெரிய தமிழ் புலம்பெயர்ந்தோர் சமூகம் ஒன்றை உருவாக்கியது.

நேற்றும், பிரதமராக பல தமிழ் கனடியர்களைச் சந்தித்து, கறுப்பு ஜூலை பற்றிய அவர்களின் துயர நினைவுகளைக் கேட்கவும், இழந்தவர்களின் நினைவுகளைக் கௌரவிப்பதில் அவர்களுடன் இணைந்து கொள்ளவும், அவர்கள் நம் நாட்டிற்கு அவர்கள் செய்த பல முக்கியப் பங்களிப்புகளுக்கு நன்றி தெரிவிக்கவும் வாய்ப்பு கிடைத்தது.

கருப்பு ஜூலை மற்றும் அதைத் தொடர்ந்த வன்முறையின் போது பாதிக்கப்பட்ட மற்றும் அன்புக்குரியவர்களை இழந்த அனைவருக்கும் கனடா அரசாங்கத்தின் சார்பாக எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன், மேலும் வெறுப்பற்ற எதிர்காலத்தை உருவாக்குவதற்கானஎங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறேன் - என்றுள்ளது.

# 13 குறித்து முதலில் பெரமுனவுடன் இணக்கம் காணட்டும் ஜனாதிபதி

## சுதந்திர மக்கள் சபை அறிவிப்பு

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்த முன்பாக முதலில் பொது ஜன பெரமுன உள்ளிட்ட ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் அது தொடர்பில் ஓர் இணக்கத்தை ரணில எட்டவேண்டும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

நாவல பகுதியில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது பல பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது என நித்திரையில் இருந்து எழுந்ததை போல் கருத்துரைக்கிறார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கபிரதமராக பதவி வகித்த ஆட்சியாளர்கள் ஏன் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழர்களின் அரசியல் பிரச்சினை, அதிகார பகிர்வு ஆகியவற்றை தனது அரசியலுக்காக பயன்படுத்திக் கொள்கிறார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாகாண சபைகளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோற்றுவித்தார். அதனை கூட தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாக்கவில்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வாக அறிமுகப் படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையை நல்லாட்சி அரசாங்கம் பலவீனப்படுத்தி, மாகாண சபை வெள்ளை யானை போன்றது என்ற நிலைப்பாட்டை தோற்றுவித்தது. மாகாண சபை முறைமை நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக்கூற வேண்டும்.

13 ஆவது திருத்தம் மற்றும் அதிகார பகிர்வு தொடர்பில் சர்வ கட்சி கூட்டத்தை நடத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

சுதந்திர மக்கள் சபைக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதிகார பகிர்வு விவகாரத்தில் ஏனைய அரசியல் கட்சிகயுடன் பேச்சு நடத்த முன்னர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஜனாதிபதி பேச்சு நடததவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த காலங்களில் எத்தனையோ சர்வகட்சி கூட்டங்களை நடத்தி விட்டார்.

ஆனால் தீர்வு கிடைக்கவில்லை. தமிழர்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றுவதற்காக சர்வக்கட்சி என்ற நாடகத்தை அரங்கேற்றுவதற்கு முன்னர் பொதுஜன பெரமுனவின் நிலைப்பாட்டை அவர் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும் - என்றார்.

# வணிக பீடத்தில் உணவுத் திருவிழா



யாழ்ப்பாணப்பல்கலைக் கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்தில் சுற்றுலா விருந்தோம்பல் முகாமைத் துவ கற்கைகள் துறை இரண்டாம் வருட மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்று உணவுத் திருவிழா இடம்பெற்றது.

திருநெல்வேலி பால்பண்ணையில் அமைந்துள்ள முகாமைத்துவ மற்றும் வணிகபீட வளாகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் உணவுத் திருவிழா தொடங்கியது..



உணவுத்திருவிழாவை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா தொடக்கி வைத்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் வணிக பீடபீடாதிபதி பா.நிமல தாசன், சுற்றுலா விருந்தோம்பல் முகாமைத்துவ கற்கைகள் துறைத் தலைவரும் பேராசிரியருமான சி.சிவேசன் உள்ளிட்ட விரிவுரையாளர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தமிழ் சிங்கள இஸ்லாமிய கலாசார உணவு வகைகள் மற்றும் மேலைத்தேய உணவு வகைகள், குடிபானங்கள் என பல்வேறுபட்ட உணவுகளும் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. இரண்டாம் ஆண்டு முதலாம் அரையாண்டில் கல்வி கற்கும் மாணவர்களின் முயற்சியாண்மையை விருத்தி செய்யும் நோக்கில் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

### சுகாதார அதிகாரிகளின் கருத்துகளுக்கு தடை விதிக்கும்

# சுகாதார அமைச்சுச் செயலரின் சுற்றறிக்கையை மீளப்பெறுங்கள்

### ரவி குமுதேஷ் வலியுறுத்து

அரசாங்கத்தின்கொள்கை மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவதற்கும், விமர்சிப்பதற்கும் சுகாதார சேவைச் சேர்ந்த அதிகாரிகளுக்குகடுமையான விதிமுறைகளுடான தடை விதித்து சுகாதார அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையை மீள பெற வேண்டும் என தொழில் வல்லுநர்களின் தொழிற் சங்க கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

மேற்படிசுற்றறிக்கையை உடனடியாகமீளபெறவில்லை எனில் சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் மக்களையும்ஒன்றிணைத்து பாரிய போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக அந்த அமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில்நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் -

அரசாங்கத்தின்கொள்கை மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துக்களை வெளியிடுவதற்கும் விமர்சிப்பதற்கும் சுகாதார சேவைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு கடுமையான விதிமுறைகளுடான தடை விதித்து சுகாதார அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளார். இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இதற்கு நாம் முழுமையாக எதிர்ப்புத் தெரிவிக்கிறோம்.

உண்மைகளைவெளிக் கொணர்வதற்கு தடைவிதித்தும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சூழ்ச்சிகளை மறைப்பதற்கும் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையா? இது என்பது தொடர்பில் எமக்கு சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த சுற்றறிக்கை தொடர்பாக ஒரு சேவையை மாத்திரம் கட்டுப்படுத்துவது மாத்திரமின்றி சுகாதாரத்துறை சார்ந்த அனைத்து தரப்பினரையும் அச்சுறுத்தும் விதமாக இது வெளியிடப்பட்டுள்ளது.



எனவே, சுகாதார அமைச்சின் செயலாளர் இவற்றை சரிசெய்ய வேண்டும். இல்லையெனில் நாம் சிவில் அமைப்புகள், அனைத்துதொழிற்சங்கங்கள் மற்றும் நாட்டு மக்களையும் ஒன்றுசேர்த்துபோராட்டத்தை முன்னெடுப்போம். இதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும். - என்றார். (05)

## வெளிநாட்டு துப்பாக்கியுடன் மத்துகமவில் ஒருவர் கைது

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் மத்துகம - ஹொரஹேன பிரதேசத்தில் ஒருவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அளுத்கம முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 12 போர் துப்பாக்கி மற்றும் அதே ரகத்தை சேர்ந்த இரண்டு தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் பதுகம பிரதேசத்தை சேர்ந்த 62 வயதான ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மத்துகம நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.



# மொட்டு ஆதரவை பெற்றவரே அடுத்ததடவையும் ஜனாதிபதி

### அமைச்சர் பிரசன்ன ஆரூடம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் ஆதரிக்கப்படும் வேட்பாளர் நாட்டின்ஜனாதிபதியாக வருவார் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி ஒரு கொலை கலாசாரத்தைக்கொண்ட கட்சி எனத் தெரிவித்த அமைச்சர், மொட்டு ஒருபோதும் கொலைகாரக்கட்சிஅல்லஎன்றும், நாங்கள் நாட்டுக்காக உழைத்த கட்சி என்றும் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்காபொதுஜன பெரமுனவின் அத்தனகல்ல தொகுதிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டார். வெயங்கொடை அநுர பண்டாரநாயக்க அரங்கில் இந்தக் தொகுதிக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கம்பஹா மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்களான உபுல்மகேந்திரராஜபக்ஷ சஹன்பிரதாப், கோகிலா ஹர்ஷனி குணவர்தன, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் பிரதிநிதிகள், கட்சி உறுப்பினர்கள் உட்படப் பலர்கலந்துகொண்டனர்.

இந்த கூட்டத்தின் போது பிரசன்ன ரணதுங்க மேலும் கூறிய கருத்துக்கள் வருமாறு -

கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட போராட்டத்தால் சில பின்னடைவுகளைச் சந்தித்தோம். போராட்டத்துடன் சேர்த்து 69 லட்சம் வாக்குகளை எடுத்த எமது ஜனாதிபதி பதவி விலகினார்.

மூன்றில் இரண்டு பங்கு அதிகாரத்தைக் கொண்டிருந்த நமது பிரதமர்தலைமையிலான அரசு பதவி விலகியது. எங்கள் வீடுகள் எரிக்கப்பட்டன. நாங்கள் அச்சுறுத்தப்பட்டோம். ஆனால் இப்போது நாங்கள் பலமாக இருக்கிறோம்.

அத்தனகல்ல இலங்கை சுதந்திரக் கட்சியை சார்ந்த தொகுதியாகும். ஐந்து பெரும் சக்திகளைத் திரட்டி உருவாக்கப்பட்ட இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவத்தை வழங்கிய மஹிந்த ராஜபக்ஷ 2015 ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்டபோது, எமது முன்னாள் கட்சி உறுப்பினர்களின் சார்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உருவாக்கினோம்.



கிராமஅளவில்கட்சிஉறுப்பினர்களை ஒன்று திரட்டி கட்சிக்கு வலுவான அடித்தளம்அமைத்தோம்.

மஹிந்த தோற்கடிக்கப்பட்ட பின்னர், அவர் மீண்டும் வருவார் என நாம் நினைக்கவில்லை. அவருக்காக நாடு முழுவதும் சென்றோம்.

மஹிந்த காற்றை உருவாக்கினோம். அதற்கான ஆற்றலைகம்பஹா எமக்கு வழங்கியது. 2018 தேர்தல் நடந்தபோது அனைவரும் ஒன்று சேர்ந்து தேர்தலில் நில்லுங்கள் என்றார்கள். தனியாகக் கேட்போம் என்று நான் பகிரங்கமாகச் சொன்னேன். அப்புறம் எல்லாரும் முடிவு பண்ணி தனியாகக் கேட்டோம். நாங்கள் வெற்றி பெற்றோம். ஜனாதிபதித் தேர்தலின் போது கம்பஹாவில் 3 லட்சத்து 50 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம். பொதுத் தேர்தலின் போது 13 ஆசனங்களைப் பெறுவோம் என்று கூறினேன். நாங்கள் 13 ஆசனங்களில் வெற்றி பெற்றோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நான் ஒருபோதும் குறை கூற மாட்டேன். மஹிந்த ராஜபக்ஷ நாட்டை போரிலிருந்து காப்பாற்றி நாட்டுக்கு பலத்தைக் கொடுத்தது போல், முன்னாள் ஜனாதிபதிகோட்டாபய நாட்டையும் எமது மக்களையும் கொவிட் தொற்றிலிருந்து காப்பாற்றினார். உலகப் பொருளாதாரம், இயற்கைச் சீற்றங்கள், கொரோனா தொற்று போன்றகாரணங்களால் நமது நாட்டின் பொருளாதாரம் சரிந்தது.

ஜே.வி.பி ஒருகொலைகாரகலாசாரம்கொண்ட கட்சி. மக்களைக் கொலை செய்த கட்சி. போராட்டத்தின் போது கம்பஹாவிலேயே பெரும்பாலான வீடுகள் எரிந்து சேதம்ஏற்பட்டது. அதிலும் அதிக சேதம் மினுவாங்கொடையிலேயே ஏற்பட்டது. எங்களின் 13 வீடுகள் எரிக்கப்பட்டன. மொட்டின் சக்தியை உடைக்க எங்களை அடித்தார்கள். நாங்கள் கடினமான காலங்களை கடந்து வந்துள்ளோம். இவை எமக்கு சவால்கள் அல்ல. போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அடித்து வீழ்த்துவது எங்களுக்குப் பெரிய விடயம் அல்ல. ஆனால் நாங்கள் அவர்களை அடிக்கப் போகவில்லை. எனது வீட்டை எரிக்க வந்தவர்களில் 6 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். இயற்கை அவர்களைத் தண்டிக்கும். நாங்கள் மக்களைக் கொல்லும் கட்சி அல்ல. நாங்கள்நாட்டுக்காக உழைத்த கட்சி.

இனிவரும் காலங்களில் கிராமம் தோறும் சென்று எமது கட்சியையும் எமது கட்சி உறுப்பினர்களையும் மேலும் மேலும் பலப்படுத்துவோம். இனிமேல் எங்கள் கட்சிக்காரர்களை சீண்டுபவர்கள் வட்டியுடன் சேர்த்து முதலையும் வழங்க வேண்டும் என்பதை நான் தெளிவுபடுத்துகிறேன். இதை ஓர் அச்சுறுத்தலாக எடுத்துக்கொள்ளலாம். எச்சரிக்கையாகவும் எடுத்துக்கொள்ளலாம். இன்று ஜேவிபி அலை இல்லை. யார் விரும்பினாலும் ஆட நாங்கள் தயாராக இல்லை.

அடுத்த ஆண்டு நாங்கள் தேர்தலை சந்திப்போம். செப்ரெம்பர் மாதத்துக்குள் நமது பொருளாதாரம் வலுவடையும். நாடு பலமாகும் போது நாங்கள் தேர்தல் ஒன்றைத் தருவோம். நமது தலைவர்கள் நாட்டை போரிலிருந்து காப்பாற்றினார்கள். கொவிட் நோயிலிருந்து நாட்டைக் காப்பாற்றினார்கள். நாங்கள் அப்படிப்பட்ட கட்சி. மேலும் நான் கூறுகின்றேன், அடுத்த தேர்தலில் மொட்டுடன் இணைந்து போட்டியிடும் ஒருவரே ஜனாதிபதியாவார். அதே போல் நாங்கள் அடுத்த அரசாங்கத்தையும் அமைப்போம். உங்கள் ஆதரவுடன் நாங்கள் அதை நிச்சயமாக செய்வோம். - என்று அவர் கூறினார். (05)

## லாப் காஸ் எரிவாயு நிறுவனத்துக்கு விலை குறைக்க ஒரு மாத அவகாசம்

### நளின் பெர்னாண்டோ விடுத்தார்

லாப் சமையல் எரிவாயு சிலிண்டர்ஒன்றின்விலையை லிற்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலைக்கு சமமாக விலை நிர்ணயிக்க வேண்டும். அதற்காக லாப் காஸ் நிறுவனத்துக்கு ஒருமாத காலம் அவகாசம்வழங்கிஇருப்பதாக வர்த்தக அமைச்சர் நலின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

லிற்ரோ மற்றும் லாப் சமையல்எரிவாயுவிலைகளில் சமநிலையைபேணுவதற்கே இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதன் பிரகாரம் அடுத்த வாரத்துக்குள் லாப் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை 350 ரூபாவால் குறைக்கவேண்டும் என்றும் லிற்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலைக்கு சமமாக்குவதற்கு இரண்டு கட்டங்களின் கீழ் விலை குறைப்பு மேற்கொள்ள வேண்டும் என்றும் லாப் நிறுவனத்துக்கு தெரிவித்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

12.5 கிலோ லிற்ரோ சமையல்எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை மற்றும் 12.5 லாப் சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலைகளுக்கிடையில் 708 ரூபா வித்தியாசம் காணப்படுகிறது. அந்தளவு தொகை வித்தியாசம் இருக்க முடியாது. - என்றார். (05)

## காத்தான்குடி கோட்ட கல்வி அலுவலர் பதவி வெற்றிடம் தொடர்பில் ஆராய்வு

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை முன்னாள் அமைச்சரும், முன்னாள் ஆளுநருமான ஹிஸ்புல்லா, திருகோணமலையில்உள்ளஆளுநர் செயலகத்தில் சந்தித்தார்.

இந்த கலந்துரையாடல் சனிக்கிழமை இடம்பெற்றதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

காத்தான்குடி கோட்ட கல்வி அலுவலகர் பதவி வெற்றிடம் ஏற்பட்டிருந்த நிலையில், அந்த பதவிக்கு இலங்கை கல்வி சேவை தரம் 3 தகுதியுடையவர்கள் இல்லாமையால், தற்காலிக அதிகாரியாகஇலங்கைஅதிபர் சேவையின்தரம்1 தகுதியை கொண்ட ஆ.ஆ.கலாவுதீன் நியமிக்கப்பட்டிருந்தார்.

இலங்கைகல்விசேவை தரம் 3 படிப்பை நிறைவு செய்திருந்த யு.பு.மொஹமட் ஹக்கீமுக்கு கோட்ட கல்வி அலுவலகர் நியமனம் வழங்கப்பட்டு, தற்காலிக அதிகாரியாக நியமிக்கப்பட்ட ஆ.ஆ.கலாவுதீனுக்குஇடமாற்றம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் ஆ.ஆ. கலாவுதீனுக்கு 58 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதால் இவரின் வயதை அடிப்படையாக கொண்டும், மனிதாபிமான ரீதியிலும் அருகில் உள்ள ஒரு பாடசாலையில் நியமனம் வழங்க வேண்டுமெனஹிஸ்புல்லா, ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தார்.

கோரிக்கையை ஏற்று, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திஸாநாயக்கவிடம் இந்த விடயம்தொடர்பாகஆராய்ந்து, கலாவுதினைஅருகில்உள்ள பாடசாலைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு பணிப்புரை விடுத்ததுடன், கல்வி அமைச்சின் சட்ட திட்டங்களுக்குஅமைவாகஇடமாற்றத்துக்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஆளுநர், ஹிஸ்புல்லாவிடம் உறுதியளித்தார்.

நஷீர் ஹகமட் ஓர் அமைச்சரவை அமைச்சராக இருந்தும் அவரால் செய்ய முடியாத விடயத்தை, எவ்வித அரச பதவியுமின்றி ஹிஸ்புல்லா நாகரீகமான முறையில் செய்து முடித்துள்ளமை வரவேற்கதக்கதென பல அமைப்புகள் தெரிவித்துள்ளன.

நாகரீகமான முறையிலும் மனிதாபிமான முறையிலும்கிழக்குமாகாண ஆளுநரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டால் சட்டத்திட்டங்களுக்குஅமைய அவர் உரிய வகையில் நடவடிக்கைகளைமேற்கொள்வார் என்றும், அரட்டல் மிரட்டல்களுக்கு அவர் ஒருபோதும் அடிபணிய மாட்டார் என்பதற்குஇந்தசெயற்பாடும், அவருடைய கடந்தகால அரசியல் செயல்பாடுகள் எடுத்துக்காட்டு எனவும் பல அமைப்புகள் கருத்துக்கள் வெளியிட்டுள்ளன. (05)

## பொலிஸ் உத்தியோகத்தருக்கு இலஞ்சம் வழங்கிய நபர் கைது!

### கலேவெலவில் சம்பவம்

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு இலஞ்சம் வழங்கிய நபர் ஒருவர் கலேவெல பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். இப்பாகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 64 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தனது மகன் ஒருவர் தொடர்பில் முறைப்பாடுசெய்யவேண்டும் என கலேவெல பொலிஸ் பொறுப்பதிகாரியைச் சந்தித்துள்ளார்.



இதனையடுத்து முறைப்பாட்டை பதிவு செய்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்கிய பின்னர், இரு தரப்பையும் முன்னிலைப்படுத்துமாறு பல்வேறு முறைப்பாடுகள் பிரிவு பொறுப்பதிகாரிக்கு பொலிஸ் பொறுப்பதிகாரி அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

இதன்போது சந்தேக நபர் 5,000 ரூபா பணத்தாள்கள் அடங்கிய உறையொன்றை பொலிஸ் உத்தியோகத்தரிடம் வழங்கிய நிலையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சிறுமியின் இறப்பு தரும் விழிப்பு

**யாழ்ப்பாணத்தில் 17 வயதுச் சிறுமி ஒருத்தியின் இறப்பு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. வீட்டுப் பணிப்பெண்ணாக வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த நிலையில் திடீரென்று ஒருநாள் வீட்டில் எவரும் இல்லாத நிலையில் அவர் தூக்கில் தொங்கினார் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இது குறித்த காவல்துறையினர் ஏற்கனவே வழக்குப் பதிவு செய்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர். அதேநேரம், இந்த விடயத்தில் வடக்கு மாகாண ஆளுநரும் கரிசனை செலுத்தியுள்ளார். அதிகாரிகளிடம் இருந்து முழு அறிக்கை கேட்டுள்ள அவர், விசாரணைகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும் தனது அலுவலக அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.**

**இலங்கைச் சட்டங்களின்படி சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது குற்றம். தரம் 13 வரை – அதாவது குறைந்தது 18 வயதுவரை சிறுவர்கள் பாடசாலைக் கல்வியைப் பெறுவது கட்டாயமானது. அப்படியிருக்கும்போது 17 வயதில் இந்தச் சிறுமி எப்படி வீட்டுப் பணிப்பெண்ணாக வேலைக்கு அமர்த்தப்பட்டார் என்பது விசாரணைக்குரியது. அதேநேரம் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி ஏழை மக்களின் வயிற்றில் ஏற்கனவே அடித்துள்ள நிலையில், பாடசாலை இடைவிலகல்கள் அதிகரித்துள்ளன. இடைவிலகுபவர்கள் இத்தகைய பணிகளுக்குச் செல்வதையும் தவிர்க்க முடியாது.**

**பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போதிய நிதி உதவிகளையோ பொருள் உதவிகளையோ ஆட்சியாளர்கள் இன்னும் முறையாகச் செய்து முடிக்காத நிலையில் சிறுவர்கள் வேலைக்குச் சென்று தமது குடும்ப வருமானத்தைப் பெருக்க நினைப்பது எங்கும் நடக்கக்கூடியதுதான். உயிரிழந்த சிறுமியின் பின்னணியிலும் இதுபோன்ற காரணங்கள் ஆராயப்படவேண்டியவையாக இருக்கின்றன.**

**அதேநேரம், சிறுமியின் இறப்புத் தொடர்பில் அக்கறை செலுத்துவதுடன் மட்டும் நின்றுவிடாது, வடக்கு மாகாணத்தில் பாடசாலைகளைவிட்டு இடைவிலகிய ஏனைய சிறுவர்கள் ஒவ்வொருவர் குறித்தும் அக்கறை செலுத்தப்படவேண்டியதே காலத்தின் தேவை. அவர்களும் இதுபோன்ற வேலைகளுக்குச் செல்கிறார்களா? குடும்ப வருமானத்திற்காக கூலி வேலைக்குச் செல்கிறார்களா என்பதைக் கண்டறிந்து அவர்களைப் பாடசாலைக்களுக்குத்திரும்ப அழைத்து வருவதற்கான தனி வேலைத் திட்டங்கள் தொடங்கப்படவேண்டும்.**

**உடனடியாகச் செய்யப்படவேண்டிய பணி இது. ஆளுநரும் அதிகாரிகளும் இந்த விடயத்தில் கூடுதல் அவதானம் எடுத்து உடனடியாகச் செயலாற்றவேண்டும். இல்லையேல் இதுபோன்ற இறப்புககளை நாம் இன்னும் அதிகளவில் பார்க்கவேண்டியிருக்கும். உயிரிழந்த சிறுமி தனது பெற்றோருடன் மாதத்தில் ஒரு தடவை மட்டுமே பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டார் என்றும் தொலைபேசி பயன்படுத்த அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது என்றும் சிறுமியின் உறவினர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதனால் ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாகச் சிறுமி தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என்கிற சந்தேகத்தை இது ஏற்படுத்துகின்றது. அது குறித்தும் விசாரணை நடத்தப்படவேண்டும்.**

**அதுமட்டுமல்ல வீட்டுப் பணிப்பெண்களாக வேலை செய்பவர்களுக்கு உரிய பணிப் பாதுகாப்பு மற்றும் ஒழுக்க விதிகள், ஒப்பந்த விதிகள் உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்படவேண்டும். தற்போது வீட்டுப் பணிப் பெண்களுக்கு அத்தகைய சட்டப் பாதுகாப்பு எதுவும் இல்லை. பணிப் பெண்களுக்கு உரிய வசதிகள், உரிமைகள் குறித்த எந்தவொரு சட்ட திட்டங்களும் இல்லாத நிலையில் அவர்களின் உரிமைகளை நிலைநாட்டுவது பெரும் சவாலுக்குரியது. அதனை நிவர்த்திக்க வீட்டுப் பணிகளையும் வேலையாக அங்கீகரித்து, அதற்கான சட்ட திட்டங்கள், விதிகள் உருவாக்கப்படவேண்டும். சிறுமியின் இறப்பு அந்தக் கோணத்திலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக இருக்கட்டும்.**

# கற்பகதரு என்னும் அற்புதம்
# ஏடுதந்திட்ட எங்கள் பனை

### அங்கம் – 6



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

இரண்டு தாத்தாக்களை நாங்கள் மறந்துவிட முடியாது. ஒருவர் எங்கள் ஈழத்தவரான தங்கத்தாத்தா சோமசுந்தரப்புலவர். மற்றவர் தமிழ் நாட்டினைச் சேர்ந்த உ.வே.சா என்று அழைக்கப்படும் உத்தமதானபுரம் வேங்கட சுப்பையர் சாமிநாத ஐயர் அவர்கள். ஈழத்துத் தாத்தா கற்பகதருவாம் பனைக்கென்றே "தாலவிலாசம்" பாடிப் பனையினை வியந்துநின்றார். பனையின் ஓலையினை எங்கள் தங்கத் தாத்தா.........

ஐந்து வயதினிற் கையி
லெடுக்கின்ற
வரிவரி யேடு முதலாக
முந்து பலகலை யாகம
மோலையில்
முன்ன மெழுதினார்
ஞானப்பெண்ணே

என்று பனை ஓலையின் பிறப்பாகிய எங்களின் ஓலைச் சுவடிகளை மனமிருத்தும் வகையில் பாடிப் பதித்ருக்கிறார். இந்தியத் தாத்தாவோ பனையின் கொடையான பனை ஓலையால் அமைந்த ஏடுகளை ஊரூராய்ச் தேடிச் சென்று எமக்களித்து உயர்ந்து நிற்கிறார்.

எங்கள் முன்னோர்கள் மெஞ்ஞானத்திலும் உயர்ந்து நின்றார்கள். விஞ்ஞானத்திலும் உயர்ந்தே இருந்தி ருக்கிறார்கள். அவர்களின் அருமையான ஒரு தெரிவுதான் கற்பகதருவாய் பனையினை எடுத்தது எனலாம். பனையின் சாதாரண ஓலையினை உற்று நோக்கி அதனை சிந்தனைகளைப் பதிவிடும் ஒன்றாக மாற்றிட நினைந்தமையை வியக்காமல் இருந்திட முடியுமா ! அவர்களிடம் தோன்றிய அந்தச் சிந்தனை அறிவியலின் விளைவு என்றுதானே கொள்ள முடிகிறது. குறைந்த செலவில் நிறைந்த பயனையுடைய அவர்களின் தேடலும், அதற்காக அவர்களின் நாடலுமாகிய நிலையினை எண்ணி எண்ணி வியந்து நிற்கிறோம் அல்லவா !

எத்தனையோ வகை இருக்க , எத்தனையோ மரமும் இலைக ளும் இருக்க பனையின் இலையை அதாவது அதன் ஓலையினை எப்படித்தான் தேர்ந்தெடுத்தார்களோ தெரியவில்லை.




அந்தத் தெரிவினால் எங்களு க்கு சிந்தனைச் செல்வங்களும் கிடைத்தன. கற்பகதருவாம் பனையும் எங்கள் வாழ்வியலுடன் இணைந்து போயும் விட்டது என்பதைக் கருத்திருத்துதல் கட்டாயமாகும்.

பனை மரங்களில் நிறைய வகைகள் உண்டு. எல்லாப் பனைகளது ஓலைகளும் ஏட்டுக்குப் பொருத்தமாய் அமைந்திருப்பதில்லை. தாளப்பனை கூந்தல்பனை, லாந்தர்பனை போன்ற பனை மரங்களினது ஓலைகளே ஓலைச் சுவடிகள் செய்ய ஏற்றனவாக அமைந்தன என்று அறிய முடிகிறது. பழுப்பு நிறம் கொண்ட ஓலைகளையே ஓலைச்சுவடிகள் தயாரிக்கத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். பொருத்தமான பனை ஓலை களைத் தேர்ந்தெடுத்த பின்னர் - சுவடிகள் தயாரிப்பதற்கு - முதலில் பனை ஓலைகளைத் தேவையான அளவில் கத்தரித்துக் கொள்வர். இவ் வாறு கத்தரிக்கப்பட்ட ஓலைகள் மிக நன்றாக உலர்த்தப்படும். ஈரமி ன்றி நன்றாகக் காய்ந்தபிறகு இவ்வோலைகள் தண்ணீரில் இட்டு வேக வைக்கப்படும். இவ்வாறு இவை கொதிக்க வைக்கப்படுவதால் ஓலைகளில் ஒரு இலகுத்தன்மை



ஏற்படுகிறதாம். பிறகு ஓலைகள் மறுபடியும் நன்கு காயவைக்கப்படும், காய்ந்த பிறகு கனமான சங்கு அல்லது மழுமழுப்பான கல்கொண்டு ஓலைகளை நன்றாகத் தேய்ப்பார்கள். இப் படிச் செய்வதால் எழுதுவதற்குத் தயாரான ஓலைகள் அதாவது ஏட்டு க்கு ஒரு பளபளப்பு ஏற்படும். மேலும் நேராகத் தகடுபோலவும் ஆகிவி டும். இவ்வாறு பதப்படுத்தப் படுவதனால் ஏடு எழுதுவதற்கு ஏற்ற நிலையை அடைந்து விடுமாம். வேறு ஒரு முறையும் இதில் இருக்கி றது என்றும் அறிய முடிகிறது. அதாவது ஓலையின்மீது நல்லெண்ணெய் பூசி ஊற வைப்பார்களாம். இவ்வாறு செய்வதை "ஓலை வாருதல்" என் று அழைத்தார்கள். குறிப்பிட்ட பனை ஓலைகளைப் அதாவது பதப்படுத்திய ஓலைச்சுவடிகளை ஒரே அளவில் வெட்டிய பிறகு அவற்றை ஒன் று சேர்த்து இடது பக்கம் கயிறு கட்டுவதற்காக ஓட்டை போடுவார்கள். அதில் மஞ்சள் தடவிய கயிறாய் கோர்த்து ஏடுகள் விழாமல் கட்டுவார்கள். கயிற்றின் மேல்முனையில் துளையிட்ட செப்புக்காசினை வைத்து விடுவார்கள். ஓலைச் சுவடியின் நீளம் அதிகமாக இருந்தால், வலது பக்கமும் ஒரு துளையிட்டு அந்த துளையில் இரும்பினால் ஆகிய கம்பியால் சேர்த்துக் கட்டுவார்கள். இதனை 'நாராசம்' என் று பெயர் சொல்லி அழைத்தார்கள்.

பனை ஓலைகளால் ஆகிய சுவடிகளை ஒன்றாக இணைக்கும் பொழுது அவற்றின் ஆரம்பத்திலும் முடிவிலும் அதாவது ஓலை ச்சுவடிகளின் இருபக்கமும் தேக்கு மரத்தால் ஆன பலகையை சேர்த்து கட்டுவார்கள். ஓலைகள் பாதுகாப்பாய் இருப்பதற்கும் குலைந்து போகா மல் ஒழுங்காய் இருப்பதற்கும் இவ்வாறு எமது முன்னோர்கள் செய்திருக்கிறார்கள். நூல்களை அச்சடிக்கும் இக்காலத்தில் முன்னட்டை பின்னட்டை நூலுக்குப் பாதுகாப்பாய் இருப்பது போல் பலகையினைக் கட்டுவது இருந்திருக்கிறது. அக்காலத்தில் ஏட்டின் முன்னும் பின்னும் பலகையினைக் கட்டியதுதான் இக்காலத்தில் நூல்களின் பின்னும் முன்னும் அட்டைகளை கட்டுவதற்கு வழி சமைத்திருக்கலாம் என்றும் எண்ண முடிகிறதல்லவா ! முன்னோர்களின் சிந்தனை அறிவியல் மய மாய் இருந்தே இருந்திருக்கிறது என்பதை ஒவ்வொரு செயல்களாலும் நாம் கண்டு பெருமைப்பட வைக்கிறது !

பனை ஓலையினால் ஆகிய ஓலைச்சுவடிகளில் எழுதுவது என்பது இலகுவான காரியம் அல்ல. ஓலையில் எழுதுவதற்கு ஏற்றது எது என் று எண்ணி அதற்கான ஒரு கருவியையும் கண்ட எங்கள் முன்னோரை வியக்காமல் இருக்கவே இயலாது. ஓலையில் எழுதுவதற்கென்று வடி வமைக்கப்பட்ட கருவியே எழுத்தாணி ஆகும். இதனைக் கொண்டே பனை ஓலைகளினால் தயாரிக் கப்பட்ட சுவடிகளில் எழுதினார்கள். எழுதிக் குவித்தார்கள் எனலாம். . பொதுவாக இது இரும்பினால் செய்யப் பட்டதாக இருக்கும். ஆனால் அரசர் களும் வசதி படைத்தவர்களும் தங் கம், வெள்ளி, தந்தம் போன்றவற்றில் செய்த எழுத்தாணிகளை வைத் திருந்தார்கள் என்றும் அறிய முடிகிறது. தந்தம் என்றவுடன் எங்களுக்கு விநாயகப் பெருமானே வந்து நிற்பார். பனை ஓலை ஏட்டுக்கும் விநா யகப் பெருமானுக்கும் ஒரு இணைப்பு இருக்கிறது. கிறித்துவுக்கு முன் எழுந்ததுதான் வியாசரது மகா பாரதம். அந்தப் பாரதத்தை வியாசர் சொல்லச் சொல்ல விநாயகப் பெருமானே எழுத்தாணி கொண்டு எழுதினார் என்பது வழங்கிவரும் ஒரு செய்தியாகவே இருக்கிறது. வியாசர் வேகமாக கதையினைச் சொல்லி வரும்போது – எழுதிய எழுத்தாணி முறிந்து விட – விநாயகப் பெருமான் கதை இடையில் நின்று விடக் கூ டாது என்று எண்ணி – தன்னுடைய ஒரு கொம்பினை அதாவது தந்தத்தை

தொடர்ச்சி 09ம் பக்கம்...


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக இந்திய பயணத்தில் பேசப்பட்டவை என்ன?

## அகில இலங்கை பொது மீனவர் சங்கம் கோரிக்கை

வடக்கு மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதி உட்பட அரசாங்கம் இந்தியாவுடன் முன்னெடுத்துள்ள விடயங்கள் தொடர்பாக நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என அகில இலங்கை பொது மீனவர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் ரத்ன கமகே தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்திய விஜயம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் -

இந்திய மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு நாட்டின் வடக்கு கடல் சமுத்திரத்தை அழித்து வருகின்றனர். அதனால் வடக்கு மீனவர்களுக்கு தங்களின் தொழிலை செய்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இது தொடர்பாக நாங்கள் அரசாங்கத்துக்குத் தெரிவித்து வந்திருக்கிறோம்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்திய விஜயத்தின்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும் அழைத்துச்சென்றிருந்தமையால், இந்திய மீனவர்களுக்கு எமது வடக்கு கடற்பரப்பில் மீன் பிடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இரகசியமாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு இருக்கிறதா? என்ற சந்தேகம் எமக்கு எழுகிறது.

அதனால் ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது, இந்திய மீனவர்களை ஆக்கிரமிப்பது தொடர்பாகக் கலந்துரையாடிய விடயங்கள் என்ன என்ற விடயங்களை வெளிப்படுத்துமாறு ஜனாதிபதி செயலகம், கடற்றொழில் அமைச்சு மற்றும் வெளிவிவகார அமைச்சை கேட்கிறோம். - என்றார்.

அதேவேளை, தெற்காசியாவில் இருக்கும் இயற்கை துறைமுகம் அமைந்திருக்கும் மற்றும் மிகவும் பெறுமதியான வளங்கள் இருக்கும் திருகோணமலை மாவட்டத்தை இந்தியாவுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின் ஊடாகவே வழங்க ஜனாதிபதி இந்திய விஜயத்தின்போது நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

இந்த விடயம் நாடாளுமன்றத்துக்கும் தெரியாது, அமைச்சரவைக்கும் தெரியாது. யாருக்கும் தெரியாமலே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது என பிரஜைகள் போராட்ட அமைப்பின் ஏற்பாட்டாளர் தர்ஷன தந்திரகே தெரிவித்தார்.

(05)

# அரச வைத்தியசாலைகளிலிருந்து இரு வகை அஸ்பிரின்கள் அகற்றம்



அரச வைத்தியசாலைகளிலிருந்து இரு வகையான அஸ்பிரின் மருந்துகளை விலக்கிக்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் பரிந்துரைகளுக்கு அமைய, மருத்துவ வழங்கல் பிரிவு இது தொடர்பான சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் அஸ்பிரின்களின் பல மாதிரிகள் சமீபத்தில் தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகார சபையால் பரிசோதிக்கப்பட்டது.

இதன்போதே குறித்த இரண்டு வகை மருந்துகள் தரமற்றவை என கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த இரு வகைகளையும் சேர்ந்த அனைத்து அஸ்பிரின் மருந்துகளையும் அகற்றுமாறு மருத்துவ வழங்கல் பிரிவு அனைத்து வைத்தியசாலைகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

இதேவேளை, இரு வகை அஸ்பிரின்கள் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ள போதிலும் வைத்தியசாலைகளில் அஸ்பிரின் தட்டுப்பாடு இல்லை என சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் கபில விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார். (05)

# திருட்டு மோ. சைக்கிள்களுடன் 2 இளைஞர்கள் கிழக்கில் கைது





அம்பாறை-நிந்தவூர் மற்றும் மட்டக்களப்பு - கல்லடி பகுதிகளில் திருடப்பட்ட இரண்டு 13 லட்சம் பெறுமதியான மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சில பொருள்களுடன் இரண்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அதன்படி, நிந்தவூரில் கடந்த 18 ஆம் திகதி திருடப்பட்ட மோட்டார் சைக்கிளுடன் 32 வயதுடைய ஒருவரையும், கல்லடியில் திருடப்பட்ட மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் காத்தான்குடி ஊர்வீதியில் 19 வயதுடைய மற்ற சந்தேக நபரையும் காத்தான்குடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாரின் சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டதோடு, அந்த இருவரிடமிருந்து சுமார் 13 லட்சம் ரூபா பெறுமதியான 2 மோட்டார் சைக்கிள்கள், 1 லெப்டொப், 1 டிவீடி இயந்திரம், வீடுகளில் கொள்ளையிடுவதற்காக பயன்படுத்தும் ஆயுதங்கள் அடங்கிய பையொன்று மற்றும் சிறிய கம்பித்துண்டு ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது, குறித்த சந்தேக நபர்களில் ஒருவர் ஆரையம்பதியையும் மற்றொருவர் காத்தான் குடியையும் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (05)

# வவுனியா மக்களுக்கு அறிவுறுத்தல்

ஈரப்பெரியகுளம் தீ பரவல் சம்பவத்தை கருத்தில் கொண்டு பொதுமக்களுக்கு வவுனியா மாவட்டச் செயலாளர் சரத் சந்திர அறிவுறுத்தலொன்றை வழங்கியுள்ளார்.

அதன்படி, தற்போது நிலவும் அதிக வெப்பம் மற்றும் காற்றுடன் கூடிய வானிலை காரணமாக பொதுமக்கள் திறந்தவெளிகளில் தீ மூட்டும்போது மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வவுனியா - ஈரப்பெரியகுளம் தும்புத் தொழிற்சாலையில் வெள்ளிக்கிழமை திடீர் தீ விபத்து ஏற்பட்டு, தொழிற்சாலையின் ஒரு பகுதி தீயில் எரிந்து நாசமாகியிருந்தது. இதனையடுத்தே வவுனியா மாவட்டச்செயலர் இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார். (05)





OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
conditions apply*
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# கடற்படையினருக்குக் காணி அளவீடு: மக்கள் போராட்டத்தால் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,வடமராட்சி கிழக்கில் பொதுமக்களுக்குச் சொந்தமான காணியைக் கடற்படையினருக்கு நிரந்தரமாகச் சுவீகரிக்கும் நோக்குடன் அதனை அளவீடு செய்யும்முயற்சிகடும்எதிர்ப்புக் காரணமாக தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

முள்ளியான்கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட (ஜே/433) கட்டைக்காடு பகுதியில் கடற்படைமுகாம்அமைந்திருக்கும் ஒன்றரைப் பரப்புக் காணியை கடற்படையினருக்காக அளவீடுசெய்யும்நடவடிக்கை நேற்றுக்காலைமேற்கொள்ளப் படவிருந்த நிலையில் அங்கு ஒன்றுகூடிய பிரதேச மக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் கடும் எதிர்ப்பைக் காட்டினர். இதையடுத்துகாணிஅளவீடும் பணி தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் பிரதேச மக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன்,முன்னாள்வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர். (02)





# நீர்கொழும்பு கடலில் மூழ்கி 3 தமிழ் இளைஞர்கள் இறப்பு

நீர்கொழும்பு கடலில் நீராடிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உட்பட மூவர் நீரில் மூழ்கிச் சாவடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - சுன்னாகத்தைச் சேர்ந்த ஜெயதீஸ்வரன் ஜெயலக்ஸ்மன் (வயது 23), கொஸ்லாந்தையைச்சேர்ந்தசத்தியமூர்த்தி சிறிவிந்த் (வயது 21), டயகமவைச்சேர்ந்தவடிவேல் ஆனந்தகுமார் (வயது 23) ஆகியோரை இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் கடலில் நீராடிய இவர்கள் மூவரும் காணாமல்போயினர்

இவர்களுடன் நீராடச் சென்ற மற்றோர் இளைஞர் நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் அளித்த முறைப்பாட்டைத்தொடர்ந்து நடத்தப்பட்ட தேடுதலில் இறந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (02)

# உடப்பு காளி கோவிலில் நகைகள், பணம் திருட்டு

## பிரதான சந்தேகநபர் கைது



உடப்பு காளி கோவிலில் தங்கநகைகள்மற்றும்பணம் திருடப்பட்டமை தொடர்பில் பிரதான சந்தேக நபர் ஒருவரை உடப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முந்தல் - கருங்காலிச்சோலையைச் சேர்ந்த 30 வயதுடைய திருமணமான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருளுக்கு அதிக அடிமையாகியுள்ளார் எனப் பொலிஸார்தெரிவிக்கின்றனர்.

கடந்த 14 நான்களுக்கு முன்னர் உடப்புகாளிகோவிலுக்குள் நுழைந்த சந்தேக நபர், காளியம்மன் சிலைக்கு அணிவிக்கப்பட்டிருந்த தங்க நகைகளையும் அங்கிருந்த சுமார் 2 லட்சம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றிருந்தமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (05)

# தமிழர்களுக்குத் தேவை நிம்மதியே தனிநாடு அல்ல என்கிறார் தினேஷ்

‘தமிழ் மக்கள் நிம்மதியுடன்தான் வாழ விரும்புகின்றார்கள். அவர்கள் ஒற்றையாட்சி வேண்டும் என்றோ சமஷ்டி வேண்டும் என்றோ விடுதலைப்புலிகள் கோரிய தனிநாடு வேண்டும் என்றோ ஒருபோதும் கோரவில்லை.‘

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

தமிழர்கள் ஒற்றையாட்சியைக் கோருகின்றார்களா? சமஷ்டியாட்சியைக் கோருகின்றார்களா? தனி நாட்டைக்கோருகின்றார்களா? என்பதை அறியத் துணிவு இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் சவால் விடுத்திருந்தார். இது தொடர்பில்பிரதமர்கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

‘சமஷ்டிக் கோரிக்கையையும் தனி நாட்டுக் கோரிக்கையையும் விடுதலைப்புலிகளும் தமிழ் அரசியல்வாதிகளும்தான் கோரிவந்தனர். ஒருபக்கத்தில் தமிழ் அரசியல்வாதிகள் சமஷ்டி வேண்டும் என்று கோர மறுபக்கத்தில் விடுதலைப்புலிகள் தனி நாடு வேண்டும் என்று கோரினார்கள். இறுதியில் ஒன்றும்நடக்கவில்லை. இந்த ஒற்றையாட்சிநாட்டுக்குள்தான் மூவின மக்களும் இன்று வாழ்கின்றார்கள்.’ - என்றார். (02)





காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் இந்தியா காலூன்ற இடமளியோம்

## நில ரீதியான இணைப்பை எதிர்த்து வீரசேகர போர்க்கொடி

'இந்தியா, இலங்கையில் காலூன்றநாடாளுமன்றத்தில் பிரதிநிதிகளாக இருக்கும் எவரும்கைஉயர்த்தக்கூடாது. அது நாட்டின் பாதுகாப்புக்கு மிகப்பெரியஅச்சுறுத்தலாகும்.'

- இவ்வாறு ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின்போது இலங்கையையும் இந்தியாவையும் நில ரீதியாக இணைப்பது தொடர்பான சாத்தியப்பாட்டு ஆய்வுக்கு இணக்கம் காணப்பட்டது. இது தொடர்பில் சரத் வீரசேகர கருத்துத்தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'முன்னாள் கடற்படைத் தளபதி என்ற ரீதியிலும் மக்களின் பிரதிநிதி என்ற ரீதியிலும் இந்தக் கருத்தை அரசிடம் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தியா காலூன்றினால்



வடக்கு-கிழக்குமாகாணங்கள் இலங்கையில் இருந்து துண்டாடப்படும். இதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் இடமளிக்கக்கூடாது. அது தேசிய பாதுகாப்புக்கு மிகவும் அச்சுறுத்தலானது.' - என்றார். (02)

# குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை

குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப்படுகொலைசெய்யப்பட்டுள்ளார்என்றுபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலாங்கொடை, புலத்கம பிரதேசத்தில் ஞாயிற்றுக் கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அப்பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் இல்லத்துக்கு அருகில் வைத்தே இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறித்த நபரை வாளால் வெட்டிவிட்டு அதே மோட்டார் சைக்கிளில் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

காயமடைந்த நபர் பலாங்கொடை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அழைத்துச் செல்லும்போது உயிரிழந்துவிட்டார் என்று பொலிஸார்குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் செய்யப்பட்டுள்ளார் என்று விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (02)

# நாட்டை நேசிக்கும் சக்தியே பெரமுன

## பவித்ரா பெருமிதம்



வரலாற்றில் சரியான முடிவுகளை எடுத்த ஒரு சக்தியாக பொதுஜன பெரமுன இருக்கின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அத்தனகல்ல தொகுதிக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் பவித்திராவன்னியாராச்சி இதனைக் குறிப்பிட்டார். வெயங்கொடை அநுர பண்டாரநாயக்க அரங்கில் இந்தக் தொகுதிக் கூட்டம் நடைபெற்றது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் -

நாங்கள் நாட்டை நேசிக்கும் சக்தியாக இருக்கிறோம். இந்த சக்தி முதலில் பண்டாரநாயக்காவால் பிறந்தது. அதன் பிறகு பல்வேறு தலைவர்கள் இந்த சக்திக்கு வந்தனர். வெவ்வேறு பெயர்கள் கொடுக்கப்பட்டன. எந்தத் தலைவர்கள் வந்தாலும், என்ன பெயர் சூட்டினாலும், அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ந்து நாட்டில் நிலைத்து நிற்கும் சக்திஇது. இந்தசக்தியிலிருந்து பிறந்த மஹிந்த ராஜபக்ஷ முடிவின்படியே நாட்டின் போர் முடிவுக்கு வந்தது. இந்த சக்தியால்தான்நாட்டைவளர்த்தார். கோட்டாபயராஜபக்சவை ஜனாதிபதியாக்க முடிவு செய்தது இந்த சக்திதான். சேதனப் பசளை போன்ற அவர்எடுத்தசிலமுடிவுகளால் சிக்கல்கள் எழுந்தன. நாட்டில் போராட்டம் நடந்ததால் பதவி விலகினார். அதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்க சரியான தீர்மானத்தை எடுத்தோம்.

நாடாளுமன்றத்தின் ஜனாதிபதி தெரிவின் போது ரணில்விக்கிரமசிங்க மற்றும் டலஸ்அழகப்பெருமஆகியோரும் முன் நின்றனர். யாருக்கு வாக்களிப்பது என்று யோசித்தோம். அப்போது நாட்டின் ஜனநாயகம் குறித்த கேள்விகள் எழுந்தன. போராட்டங்கள் நடந்தன. நாட்டில் வேறு பிரச்சினைகள் இருந்தன. இதைப் பார்த்துவிட்டு ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க முடிவு செய்தோம். அவருடன் எங்களுக்கு அரசியல் ரீதியாக பெரிய கருத்து வேறுபாடுகள் இருந்தன. ஆனால் அவர் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவார், சர்வதேச உறவுகளின் அடிப்படையில் நாட்டைமீண்டும்கட்டியெழுப்புவார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நாங்கள் அவருக்கு ஆதரவளித்தோம்.

நாட்டின் இளைஞர்களின் அடுத்த தலைமுறையை ஏமாற்ற ஜே.வி.பி. முயற்சி செய்கிறது. இளைஞர்கள் பேஸ்புக்கைப் பார்த்து முடிவெடுக்கிறார்கள். பெரியவர்களான உங்களைப் போன்று சமுதாயத்தைப் பற்றிய அறிவு அவர்களுக்கு இல்லை. கியூபா போன்ற அரசாங்கத்தை கட்டியெழுப்புவதாக ஜே.வி.பி. கூறுகின்றது. அமெரிக்காவைப் போன்ற வாழ்வைக் கொடுப்பதாகவும் கூறுகிறது. இளைஞர்கள் சிலர் இந்தக் கயிறுகளை விழுங்குகிறார்கள். இதைப் பற்றி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உள்ளது.

2015 இல் நாம் தோற்ற போது, பெரும்பான்மையான சக்திகள் எங்களுடன் இருந்தன. சர்வதேச தொண்டு நிறுவனங்களால் பராமரிக்கப்படுகின்ற சிலர் பொய்யான தகவல்களைப் பரப்புகின்றனர். போர் நடத்துவது தவறு என்றனர். கடன் வாங்குவது தவறு என்றனர். பெரும்பான்மை மக்களின் கருத்தை அடக்கி, பணம் வீசப்பட்டு அவற்றின் சித்தாந்தங்களை நாட்டில் பரப்பி வருகிறார்கள். இன்றும் அது நடக்கிறது.

ஜே.வி.பி. இன்று வரலாறு பற்றி பேசுகிறது. அவர்கள் நாட்டுக்கு என்ன செய்தார்கள்? 88-89 இல் சுதந்திரக் கட்சியின் தலைவர்களைத் தேடித் தேடி வேட்டையாடினார்கள். இடதுசாரி தலைவர்கள் கொல்லப்பட்டனர். விஜய கொல்லப்பட்டார். ஐ.தே.க தலைவர்கள் கொல்லப்பட்டனர். 50 வருடங்களாக ஜே.வி.பி. நாட்டுக்கு என்ன செய்தது? பஸ்களை எரித்து, சொத்துக்களை அழித்து, மக்களைக் கொன்று நாட்டையே அழித்தார்கள். சந்திரிகா அரசாங்கத்தின் அமைச்சரவையில் ஜே.வி.பி உறுப்பினர்கள் எம்முடன் இருந்தனர். என்ன செய்தார்கள்? 1000 அணைகள்கட்டுகிறோம்என்றுஏராளமான பணத்தை வீணடித்தனர். அவர்களுக்கு திஸ்ஸமஹாராம உள்ளூராட்சி சபையின் அதிகாரத்தை தென் பகுதி மக்கள் வழங்கினர். அவர்கள் வேலைசெய்தார்களா? எனவே, அடுத்த முறை அவர்களுக்கு மக்கள் அதிகாரத்தை வழங்கவில்லை. ஜே.வி.பி வெறும் வாய்ச் சொல் வீரர்களே.

போராளிகள் என்ன செய்தார்கள்? நாடாளுமன்றத்தில் எம்முடன் இருந்த தோழர் அமரகீர்த்தி அடித்து நிர்வாணப்படுத்தப்பட்டு நடுவீதியில் கொலை செய்யப்பட்டார். எங்கள் வீடுகள் எரிக்கப்பட்டன. அமைச்சர் பிரசன்ன வீட்டுக்கும் தீவைக்கப்பட்டது. பலரது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. எங்கள் கட்சியினரும் பல வழிகளில் துன்புறுத்தப்பட்டனர்.

ஐரோப்பாவில் கொவிட் காரணமாக பலர் உயிரிழந்தனர். பெரியவர்கள் மற்றும் குழந்தைகள் ஒக்ஸிஜன் இல்லாமல் இறந்தனர். அடக்கம்செய்ய இடமில்லை. அந்தளவுக்குபலர் இறந்தனர். ஆனால்நாங்கள்அதைநடக்க விடவில்லை. நமது சக்தி நாட்டையும் மக்களையும் பாதுகாத்தது. அன்புள்ள கம்பஹா மக்களே, இந்த சக்தி அடங்கிப் போவதற்கு ஒருபோதும் இடமளிக்காமல் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுடன் இணைந்து கொள்வீர்கள் என்பதை நான் அறிவேன். மேலும் நான் சொல்கிறேன், அடுத்த தேர்தலில் எங்கள் கட்சியின் ஆதரவின்றி யாரும் ஆட்சி அமைக்க முடியாது. மேலும் யாரும் ஜனாதிபதியாகவும் முடியாது. பல்வேறு இன்னல்கள், தொல்லைகள், அவமானங்களுக்கு மத்தியில் நீங்கள் எங்களுடன் இருப்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. - என்றும் கூறினார். (05)

# பல்கலை மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி



யாழ் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு நிகழ்வு சனிக்கிழமை நடைபெற்றது.

அமெரிக்க தூதுவராலயத்தில்இருந்துயாழ்ப்பாணம் அமெரிக்கன்கோணர் ஊடாக வழங்கப்பட்ட நிதியுதவின் கீழ் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பல்கலைக்கழகத்துணை வேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ். வசந்தரூபா, செயற்றிட்ட இணைப்பாளர் கலாநிதி ரெ. சுவந்தினி மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர்கள், விவசாயிகள்,விவசாயத்துறை சார்ந்து வேலை செய்யும் பங்காளர்கள் என பலரும் இந்நிகழ்வில்கலந்துகொண்டிருந்தனர். இந்தப் பயிற்சி பட்டறையில் 51மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். நிகழ்வில் மாணவர்களுக்கு விவசாயத் துறை சார்ந்து இருக்கும் பிரச்சினைகள் மற்றும் மாணவர்களுக்கு இந்தப்பிரச்சனைகள்சார்ந்தும் வேறுவகைகளிலும்இருக்கக் கூடிய வாய்ப்புகள் பற்றி பயனுள்ள வகையில்கலந்துரையாடப்பட்டது. மேலும், விவசாயத்துறையில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணப் பங்களிக்கும் நவீன தொழில் நுட்பங்கள் பற்றி வயம்ப பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தகலாநிதி எஸ். சுரந்தவினால் விளக்கமும் செயன்முறைப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. பின்னர் யாழ் அமெரிக்கன் கோணர், யாழ்ப்பாணம் மற்றும் யாழ் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பயிற்சியாளர்களால் தலைமைத்துவம், கருத்து வெளிப்பாடு, தன்னம்பிக்கை சார்ந்து செயற்பாட்டு பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

# பொலித்தீன் பையில் சுற்றப்பட்ட நிலையில் சிசுவின் சடலம் மீட்பு



பொலித்தீன் பையில் சுற்றப்பட்ட நிலையில் சிசுவொன்றின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வென்ஞ்சர் தோட்ட தொழிற்சாலைக்கு அருகிலுள்ள பாலத்துக்கு அடியிலிருந்து பொலித்தீன் பையில்சுற்றப்பட்டநிலையில் குறித்த சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் உள்ள நபர் ஒருவர், நோர்வூட் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்தே சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கெசல்கமுவ ஓயாவுடன் இணையும் ஆற்றிலேயே பொலித்தீன் பையில் சுற்றப்பட்ட நிலையில் சிசு சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் மேலதிக விடயங்களை அறிவதற்குவிசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் நோர்வூட் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (02)

# கற்பகதரு என்னும் அற்புதம்

4ம் பக்கத்தொடர்ச்சி....

ஒடித்து பாரதக் கதையினை எழுதினார் என்பது மரபாய் நீண்ட காலம் இருந்து வருகிறது. இங்கு முக்கியமாய்மனமிருத்தவேண்டியது தந்தினாலும் எழுத்தாணி கொண்டு பனை ஓலைச் சுவடிகள் எழுதப்பட்டிருக்கின்றன என்பதே ஆகும். அத்துடன் மிகவும் தொன்மையான பெருமான் கிழப்பிராமண வடிவத்தில் வந்து வாதங்கள் செய்து தடுத்தாட்கொண்டார் என்பதைப் புராணத்தால் அறிகிறோம். சுந்தரரும் அவர் வழி வந்தவர்களும்தனக்கு அடிமைஎன்று சபையில் கூறி அதற்கான ஆதாரமாக தன் மடியில் இருந்த ஓலையினைக் காட்டுகிறார். கிழப்பி ராமணர். அந்த



அதாவது பாரதக் கதையினை எழுதுவதற்கும்எங்கள்கற்பகதருவாம் பனையின் ஓலைகள் துணையாக இருந்திருக்கின்றனஎன்னும்செய்தியும் எனலாம். எழுத்தாணி மூலம் எழுதப்பட்ட ஓலைகளில், மஞ்சள், விளக்குக்கரி, கோவை இலைச்சாறு, ஊமத்தை இலைச் சாறு -போன்றவற்றில் ஏதாவது ஒன்றை பூசியிருக்கிறார்கள்.ஏனென்றால்சுவடியில்உள்ள எழுத்துக்கள் தெளிவாக தெரியவருவதற்காகவாம்.எங்களின்முன்னோர்களின் அறிவியல் முறைமையினை இங்கு கண்டுதெளிகிறோம்அல்லவா!

தற்காலத்தில் காகிதத்தில் அச்சடிக்கும் முறை வந்துவிட்டது. ஆயிரக்கணக்கில் பல நூல்கள் குறிப்பிட்ட மணி நேரத்தில் அல்லது நாளில் எங்களின் கைகளுக்கு வந்துவிடும். அதேவேளைஅந்தநூல்களுக்கான நகல்களையும் இலகுவாகப் பெற்றிடவுமான வாய்ப்பும் இன்று எமக்குக்கிடைத்துள்ளது. ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்ட பல நூல்களையும் அக்காலத்தில் பிரதிபண்ணும்நிலையும்காணப்பட்டது என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. சுந்தரமூர்த்திநாயனாரைத் திருமணம் செய்ய விடாமல் எம் ஓலையினை எட்டிப்பறித்து சுந்தரர் கிழித்துவிடுகிறார். அப்பொழுது அந்தக் கிழப்பிராமணர் ' நீ எப்படியும் இந்த மூல ஓலையைக் கிழிப்பாய் என்று தெரிந்தே நான் இதன் நகல் ஓலையினையும் கொண்டு வந்திருக்கிறேன்' என்று சபையில் நகலினைக் காட்டி சுந்தரரை ஆட்கொண்டார் என்று புராணத்தால் அறிகிறோம். இங்கு முக்கியமான செய்தி என்னவென்றால் மூல ஓலைக்குப் படி ஓலை எடுக்கும் வழக்கமும் இருந்திருக்கிறது என்பதேயேயாகும். நூல்களைப் பல பிரதிகள் அச்சடிப்பது போல அன்று மூல ஓலைச் சுவடிகளில் இருந்து அதை பிரதி எடுத்து எழுதும் முறையும் இருந்திருக்கிறது.அவ்வாறுஎழுதுவதற்கென்றே தனியாக எழுத்தாளர்களும் இருந்திருக்கிறார்கள்.

அப்படியான - அவர்கள் வாழ்ந்த தெருவுக்கு எழுத்துக்காரத் தெரு என்று பெயரும் வைக்கப்பட்டிருக்கிறது. இப்படி நகல் எடுப்பவர்கள் அந்தச் சுவடிகளின் கடைசி வரியின் கீழ் கையெழுத்திட்டு தமது பெயரையும், ஊரையும்எழுதி இருந்தார்கள் என்பதையும் அறிகின்றோம். நகல் எடுப்பவர்கள் பலர் இருந்தபடியால்த்தான் முன்னோர்களின் பல ஏட்டுச் சுவடிகளை அச்சடித்த நூலாக்கி நாங்கள் எங்களின் அறிவினை அகலமும் ஆளமும் ஆக்கிட முடிகிறது என்பதையும் கருத்திருத்தல் அவசியமேயாகும். இன்னுமொரு செய்தியையும் இங்கு நாம் பார்த்திட வேண்டும். அதாவது- ஓலை எழுதுவதையே தொழிலாகக் கொண்டோர் தமிழ் மண்ணில் வாழ்ந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு முறையாக ஊதியமும் வழங்கப்பட்டும் இருக்கிறது. இவர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியத்தைக் குறிக்க ஓலைக்காசு, ஓலை எழுத்துப் போறு, போன்ற சொல்லாடல் பயன்படுத்தப்பட்டிருப்பதாக பிற்காலச் சோழர் காலத்திய கல்வெட்டுகள் வாயிலாக அறியக்கிடக்கிறது. பழம் பெரும் சொத்துக்களாய் அமைந்திருக்கும் பனை ஓலையினால் ஆன ஏடுகளைப் பக்குவமாய் பேணிக் காத்திட எங்கள் முன்னோர்கள் கோவில்களையும், அரண்மனை களையும், மடங்களையும், அருங்காட்சி அகங்களையுமே தேர்ந்தெடுத்தார்கள் என்பதும்மனங்கொள்ளத்தக்கதாகும்.

தமிழர்களின் எழுத்து மரபுக்குத் தனித்துவமான குணமுண்டு. அது பனை தந்த விழுதுகளால் வேர்விடத் தொடங்கியது. பனை ஓலைகள் தமிழர் வரலாற்றைத் தாங்கி நின்ற அரண்களாகி இருக்கின்றன அல்லவா ! ஆதித் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஏடுகள் பனை மர ஓலைகளே என்பதும் கற்பகதருவுக்கான பெருமைஅல்லவா! மன்னராட்சி கால நிகழ்வுகளை விளிக்குமிடத்து மன்னர்களுக்கும் அமைச்சர்களுக்குமிடையேநடைபெறும்உரையாடல்களின் போது ஓலை என்கின்ற சொல்லாட்சி இடம் பெற்றிருப்பதையும்அறியமுடிகிறது. சங்க இலக்கியங்களான அகத்திணை, கலித்தொகை, அகநானூறு, நவ நீதிப்பாட்டியல் போன்றவைகளில் 'ஓலை'யைக் குறிக்கும் சிறப்புப் பெயர்கள் இடம் பெற்றிருப்பதும் நோக்கத்தக்கதாகும்.

சங்க கால மக்களின் மரபார்ந்த அறிவுச்செழுமையைச்சமகாலத்திற்கு கைமாற்றியஊடகமாககற்பகதருவாம் பனை விளங்குகின்றது என்பதும் கருத்திருத்த வேண்டியதே! . பனை ஓலைகள் இல்லாதிருந்தால் தொடக்க காலத்தில் புழக்கத்தில் இருந்த தமிழ் இலக்கண, இலக்கியங்கள் யாவும் புலவர்களின் நாவிலே தவழ்ந்து காற்றோடு கலந்தே போயிருக்கும்.

பனை மரத்திலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்ட ஓலைக் கீற்றில் எடுத்த எடுப்பிலேயே எழுத்தாணி கொண்டு எழுத்தை எழுதிவிட முடியாது. எழுதுவதற்கு ஏற்ப ஓலைகளைப் பதப்படுத்தும்தொழில்நுட்பத் தினைத் தமிழர்கள் அறிந்திருக்கிறார்கள். அருங்காட்சியகத்தில்ஓலைச்சுவடிகள் இன்றும் காட்சிப் படுத்தப்படுவதற்கு பதப்படுத்தல் சார்ந்த நுட்பமும் காரணமாகும். ஓலைகளை எழுத்தாணி கொண்டு எழுதுவ தற்கு ஏற்றாற்போன்று தயார்ப்படுத்துவதற்கு 'ஏடுபதப்படுத்துதல்' என்கின்றதொழில் நுட்பத்தினைக் கையாண்டிருக்கின்றார்கள் எங்களது முன் னோர்கள் என்பது வியப்பாய் இருக்கிறதல்லவா! அரேபிய நாட்டைச் சேர்ந்த பயணி அல்புருணி என்பவர் 1030இல் தென் இந்தியாவுக்கு வருகை தந்தபோது எழுதிய பயணக்குறிப்பில் பனைமரம் குறித்தும் பனை ஓலையில் எழுதும் முறைகுறித்தும்வியந்துஎழுதியுள்ளார். கிறித்தவ மதத்தைப் பரப்பும் நோக்கில் இந்தியாவில் தரங்கம்பாடி என்னும் இடத்துக்கு கி.பி 1706 இல் வந்தவர்தான் சீகன்பால்கு என்னும் மத போதகராவர். இவர் தமிழை நன்கு கற்றார். ஜேர்மனியிலுந்து அச்சு யந்திரங்களை வரவழைத்து ஏட்டில் இருந்த பல தமிழ் நூல்களை அச்சில் கொண்டுவந்து சேர்த்தார். அச் சிலே ஏற்றுவதற்கு இவர் பல தமிழ் ஏட்டு ச்சுவடிகளைத் தனது கைகளால் தொட்டுப் பெருமிதம் அடைந்திருக்கிறார்.தமிழர்கள் பனை ஓலையினைத்தேர்ந்தெடுத்துஅதனை ஏடுகள் என்னும் முறையில் ஒழுங்கமைத்து அதில் எழுதியதையும் , பராமரித் ததையும் கண்டு வியந்து மிகவும் பெருமைப்படக் கூறினார் என்றும்அறியமுடிகிறது. இப்பொழுது செய்திகளைஅனுப்பிடப்பலவழிகளும், பல நிறுவனங்களும் இருப்பது போன்று - அக்காலத்திலும் இருந்திருக்கின்றன.அதாவது செய்தியினைத் தூதாக அறிவிப்பதில் பனையின் ஓலைகள் எந்தளவு முக்கியத்துவம் உடையனவாக விளங்கி இருந்திருக்கின்றன என்பதற்கு அக்கால நாட்டார் பாடல்கள்சான்றாகிஇருக்கின்றன.இந்த வகையில் கி.பி நான்காம் நூற்றாண்டினைச்சேர்ந்தகல்வெட்டுஒன்றினால் ' ஓலைதூது ' முறை இருந்ததாய் அறிய முடிகிறது.

(வளரும் )




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.07.2023இல் வெளியிடப்பெற்றது.